**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 481/2022 |
| Name | : Karthikeyan |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது போளரப்பட்டியில் வசித்து வருகிறேன். பொன் மயில் என்ற பெயரில் கன்சல்டிங் வைத்துள்ளேன். 06.06.2022 ம் தேதி இரவு 10.30 மணிக்கு வேலையை முடித்து விட்டு பழனி – உடுமலை ரோட்டில் எனதுஅப்பா அவரது XL Super இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது மைவாடி பிரிவு அருகில் இடது புறத்தில் இருந்து வலது புறமாக ரோட்டை கடக்க முயன்ற போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த maruthi alto கார் மோதிவிட்டதாக சின்னதுரை என்பவர் எனக்கு 10.45 மணிக்கு போன் செய்து தகவல் சொன்னார். எனது அப்பாவை ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை கோகுல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நான் கோகுல் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது அப்பாவிற்கு தலை, மூக்கு, இடது தோள் பட்டையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். 08.06.2022 ம் தேதி மடத்துக்குளம் காவல் நிலையம் வந்து கார் ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் சம்பவ இடத்திற்கு 11.00 மணிக்கு வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்குச் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சின்னதுரை போனில் சொன்னதன் பேரில் தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தை நேரடியாக நான் பார்க்காததால் எந்த வாகனம் எனது அப்பா வாகனத்தின் மீது மோதியது என்று தெரியாமல் என் அப்பாவிற்கு நஷ்ட ஈடு பெற வேண்டி இந்த புகாரை பொய்யாக எதிரி மீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.14 08:46:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்